# செயலாற்று அறிக்கை 2018

கைத்தொழில் மற்றும் வணிக நீண்டகால இடம்பெயர்ந்த நபர்களின்
மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி,தொழில்
பயிற்சி மற்றும் திறன்விருத்தி அமைச்சு

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## முகவுரை

ஒரு சகாப்தகாலமாக இலங்கையின் மக்கள் சமுதாயத்தின் மேம்பாட்டுக்கான விசேடகொள்கைகள் மற்றும் விழுமியங்களின் அடிப்படையில் செயற்பட்டுவரும்

கூட்டுறவுத்துறையானது போட்டித்தன்மையுள்ள சந்தையில் தமது இலக்கை அடையும் பொருட்டு பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டி அவர்களின் பொருளாதார சமுக மற்றும் கலாச்சார தேவைப்பாடுகளை நிறைவு செய்ய அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றது.

கூட்டுறவுத்துறையானது மக்கள் சமுக உள்ளக கட்டமைப்பை பேணி பாதுகாத்துக் கொள்ளுகின்ற அதேவேளையில் தேசிய அபிவிருத்தி செயற்பாட்டுக்கான கூட்டுறவுத்துறையின் நேரடியான பங்களிப்பை பெற்றுக் கொள்ளுகின்ற பாரிய பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடம் (நிரல்) வழங்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அத்தகைய பொறுப்புக்களை குறைவின்றி நிறைவேற்றிக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தது. குறிப்பிட்ட சில மாகாணங்களுக்கேன வரையறுக்கப்படாது. நாடளாவிய ரீதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களையும் சம்மேளனங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் செயற்பாடுகளை கண்காணிப்பதற்க்கமான பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தித் திணைககளத்திடம் (நிரல்) வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மாகாண மட்டத்தில் பலதரப்பட்ட சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுறுவுச் சங்கங்களை நெறிப்படுத்தும் போது மாகாண ஆணையாளர்களுடன் சம்பந்தப்பட்ட சட்ட மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானங்களை உருவாக்குதல் மற்றும் மாகாண ஆணையாளர்களுடன் ஒருமித்து செயற்படவேண்டிய இடங்களில் அவ்வாறு செயற்பட்டும் வருகின்றது அதேபோல் இத்துறையின் மேம்பாட்டுக்காக தேசியரீதியில் தலைமைத்துவத்தை வழங்குதல் என்பன இத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசேட பொறுப்புக்களாகும். 06 மில்லியனை விட கூடுதலான கூட்டுறவாளரின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ள இலங்கை கூட்டுறவுத்துறையின் எழுச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பு மட்டுமல்லாது கடமை என்பதையுமும் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

2018 ஆம் ஆண்டுக்கான தயாரிக்கப்பட்ட இச்செயலாற்றுகை அறிக்கையின் உள்ளடக்கப்பட்ட இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்த ஆண்டுக்கான பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் முதலாம் அத்தியாயமானது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் மற்றும் கட்டமைப்பு வியுகம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் அத்தியாயத்தில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்படி காலப்பகுதியின் செயற்பாடுகள் தொடர்பாகவும் மூன்றாம் அத்தியாயத்தில் இலங்கை கூட்டுறவுத்துறையின் தேசிய ரீதியிலான கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்றிக்கையில் உள்ளடக்கப்பட்ட சகல விடயங்களும் 2018ஆம் அண்டுகாலப்பகுதியில் சிறப்புற செயற்படுத்தவதற்காக எமக்கு ஒத்துழைப்பை வழங்கிய மற்றும் எம்முடன் கைகோர்த்து அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கைத்தொழில் மற்றும் வணிக நீண்டகால இடம்பெர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன் விருத்தி அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர் (கூட்டுறவுப் பிரிவு) கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையாளர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் மற்றும் இத்திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கூட்டுறவுத்துறை சார்ந்த கூட்டுறவுத்துறையின் மேம்பாட்டுக்காக பாடுபட்ட மற்றும் ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுவிந்த. எஸ். சிங்கப்புலி
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
மற்றும் கூட்டுறவுச் சங்கப்பதிவாளர்

## நோக்கு

மக்களின் முயற்சியாண்மையாக நிலையான அபிவிருத்திக்கு கூட்டுறவு

## செயற்பணி

இலங்கையின் கூட்டுறவுத்துறையை மக்களின் முயற்சியாண்மையாக அபிவிருத்தி செய்வதற்காக ஒத்துழைப்பை நல்கி கூட்டுறவுச் சங்கங்களின் சிறந்த நிர்வாகத்ததை கட்டியெழுப்புவதற்காக பரந்த அளவில் அனுசரணையாளராக செயற்படுதல்

## உள்ளடக்கம்


**1. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் செயற்பாடுகளும் கட்டமைப்பும்**

1.1. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள்.

1.2. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கட்டமைப்பு

1.3. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொதுவான நிருவாகம்

1.3.1. ஊழியர்கள் குழுவின் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

1.3.2. புதிய நியமனங்கள் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்.

1.3.3. இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

1.3.4. இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்

1.4 **ஆளணிப்படையின் பயிற்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்**

1.4.1. உள்நாட்டு பயிற்சி

1.4.2. வெளிநாட்டு பயிற்சி

1.4.3. திணைக்களத்தின் அனுசரனையுடன் நிகழ்த்தப்பட்ட ஏனைய பயிற்சிப் பட்டறைகள்/ வேலைத் திட்டங்கள்

2. **கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்தித் செயற்பாடுகள்**

2.1. 2018 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

2.2. கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதி திருத்தம் காலத்தின் தேவைக்கேற்ப திருத்தங்களுக்கான ஆலோசனை வழங்கல்

2.3. கூட்டுறவு சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் தேர்தல்களை நடாத்துதல்

2.4. கூட்டுறவுச் சங்கங்களில் சட்ட ரீதியான கணக்காய்வு

2.5. சட்ட நடவடிக்கைகள்

2.5.1. கூட்டுறவு சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் பிணக்குகளை தீர்த்துவைத்தல்

2.5.2. நடுத்தீர்ப்பை நீதிமன்றத்தின் மூலம் வலுப்பெற செய்தல்.

2.6. **நிதிய முகாமைத்துவம்**

2.6.1. கூட்டுறவு நிதியம்

2.6.2. கூட்டுறவு மேலதிக நிதியம்

2.7. 2018 ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கிய நிதி மற்றும் செலவினம் தொடர்பான அறிக்கை

2.8. கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல்

2.9. கருத்திட்டங்களை செயற்படுத்தல்

2.10. ஊடகச் செயற்பாடுகள்

2.11. தகவல் தொழில் நுட்ப பிரிவு

**3. தேசிய ரீதியான கூட்டுறவு அமைப்புகள்**

3.1. குறித்த வருடத்தில் செயற்பாடுடையதாக காணப்பட்ட கூட்டுறவுச் சம்மேளனங்கள்

3.2 குறித்த வருடத்தில் செயற்பாடுடைய நாடளாவிய ரீதியான் கூட்டுறவுச் சங்கங்கள்

3.2.1..நாடளாவிய ரீதியிலான நிதி சேவையை வழங்குகின்ற சங்கங்கள்

3.2.2.நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் சேவைகள் வழங்குகின்ற சங்கங்கள்

3.2.3.இவ்வாண்டின் செயற்பாடுடைய கூட்டுறவுச் சங்கங்கள்

# அத்தியாயம் 01

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

ஒரு சகாப்தகாலமாக இலங்கையின் மக்கள் சமுதாயத்தின் மேம்பாட்டுக்கான விசேடகொள்கைகள் மற்றும் விழுமியங்களின் அடிப்படையில் செயற்பட்டுவரும் கூட்டுறவுத்துறையானது போட்டித்தன்மையுள்ள சந்தையில் தமது இலக்கை அடையும் பொருட்டு பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டி அவர்களின் பொருளாதார சமுக மற்றும் கலாச்சார தேவைப்பாடுகளை நிறைவு செய்துவருகின்ற கூட்டுறவுத்துறையை நெறிப்படுத்தி நிலையான அபிவிருத்தியை எற்படுத்துவதை நோக்காக கொண்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது 1930 ஆம் ஆண்டு ஜப்பசி மாதம் 01ம் திகதி கூட்டுறவு திணைக்களம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இத்திணைக்களமானது 1945 ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமாக பெயர் மற்றம் பெற்றது. தற்போது கைத்தொழில் மற்றும் வணிக நீண்டகால இடம்பெர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது இல.330 யூனியன் பிளேஸ் கொழுப்பு 02 இல் தனது காரியாலயத்தை கொண்டுள்ளதுடன் இலங்கையின் கூட்டுறவு வியாபாரம் மக்களின் வியாபாரமாக அபிவிருத்தி செய்வதற்காகவும் கூட்டுறவுச் சங்கங்களின் சிறந்த நிர்வாகத்ததை கட்டியெழுப்புவதற்காகவும் பரந்த அளவில் ஒத்துழைப்பை வழங்கி அர்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

### கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள்

- மாகாணங்களுக்கு இடையோயான மற்றும் அகில இலங்கை ரீதியான சுட்டுறவு சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் மூன்றாம் நிலை கூட்டுறவு அமைப்புகளையும் பதிவு செய்தல்
- பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் சம்மேளங்கள் மற்றும் மூன்றாம் நிலை கூட்டுறவு நிறுவனங்களில் சட்டரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அங்கு அபிவிருத்திக்கு உரிய நடவடிககைகளை மேற்கொள்ளுதல்.
- மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தேசிய கொள்கைக்கு அமைவாக கூட்டுறவு அமைப்பின் நடவடிக்கைகளை இயக்குதல்
- தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நடவடிக்கைக்கு பங்களிப் செய்தல்
- அரசின் கொள்கையை செயற்படுத்துவதன் ஊடாக அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை நல்குதல்.

### கூட்டுறவு சங்கங்களின் சட்டரீதியான செயற்பாடுகள்

- கூட்டுறவு அமைப்புகளை பதிவு செய்தல்
- ஒன்றிணைத்தல் மற்றும் வேறாக்குதல்
- அங்கத்துவம் தொடர்பான செயற்பாடுகள்
- துணைவிதியை மற்றும் துணை விதி திருத்தத்தை அங்கீகரித்தல்
- தேர்தல் செயற்பாடுகளை கண்காணித்தல்

- பொது சபையை கூட்டுதல்∴ முகாமைத்துவ சபையை கூட்டுதல் ∴ அதன் சட்டரீதியான தன்னையை தீர்மானித்தல்
- பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்பை குலைத்தல் அல்லது முடிவுறுத்தல்.
- பிணக்குகளை தீர்த்தல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் நீதி மன்றத்தின் மூலம் தீர்ப்பை வலுப்பெறச் செய்தல்
- கூட்டுறவு சங்கம் / சம்மேளனங்களின் வருடாந்த கணக்காய்வு செயற்பாட்டை மேற்கொள்ளுதல்.

**முகாமைத்துவத்துடன் தொடர்பான செயற்பாடுகள்**

- நிர்வாக சபையினரை நியமித்தல் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களை நியமித்தல்
- கணக்கியல் செயற்பாடுகள் தொடர்பான மேற்பார்வை செய்தல்
- கணக்காய்வு செயற்பாடுகள்
- சட்டத்தின் விடய விதானத்திற்கு உட்பட்டு சாதாரண மற்றும் விசேட பரீட்சிப்புக்கள் மற்றும் சோதனை செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- முகாமைத்துவ கல்வி சம்பந்தமான மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

***தொடர்பாடல் செயற்பாடுகள்***

- கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்
- மாகாண கூட்டுறவு அமைச்சர்கள் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளர்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுக்கு ஒத்துழைப்பை வழங்குதல்
- சர்வதேச கூட்டுறவு அமைப்புகள் மற்றும் கூட்டுறவு விடயத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு
- கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் கூட்டுறவு நிதி அமைப்புக்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியுடனான ஒருங்கிணைப்பு
- கூட்டுறவு சங்கங்களிற் குரிய புள்ளிவிபரம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியுடனும்
  தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு
- நெல் விதையை கொள்வனவு செய்தல் சலுகை விலையில் உரத்தை பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிககைகளில் கூட்டுறவு சங்கங்கள், கமத்தொழில் விடயப் பொறுப்பு அமைச்சு விதை நெல் கொள்வனவு செய்வதற்குரிய விடயப் பொறுப்பு அமைச்சுடனான ஒருங்கிணைப்பு
- கூட்டுறவு சங்கங்கள் சம்மேளனங்களிற் கிடையிலான ஒருங்கிணைப்பு

***அபிவிருத்தி நடவடிக்கைகள்***

- வருடாந்த வரவு செலவு வேறாக்கத்திற்கு அமைவாக தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கூட்டுறவு சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் நன்நடத்தைக்கான ஒழுக்க விழுமியங்களை எற்படுத்துவதற்கான நடவடிக்கைகனை மேற்பார்வை செய்தல்.
- கூட்டுறவு சங்கங்களின் மற்றும் சம்மேளனங்களின் அபிவிருத்திக்காக அபிவிருத்தி சார் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- கூட்டுறவு சங்கங்களின் மற்றும் சம்மேளனங்களின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை கண்காணித்தல்
- அபிவிருத்தித் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- அபிவிருத்திக்கான உதவி மற்றும் ஒத்துழைப்பை நல்குதல்.
- அபிவிருத்திக்கு வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்
- கூட்டுறவுத் துறையிலும் திணைக்களத்திலும் மனித வளத்தை அபிவிருத்தி ஏற்படுத்தல்
- ஊழியர்களினதும் உத்தியோகத்தினரினதும் நலன்புரி. நடவடிக்கைகள்

***நிதிய பரிபாலனம்***

- திணைக்களத்தின் கீழுள்ள கூட்டுறவு நிதியம் மற்றும் மிகை நிதிய முகாமைத்துவமும். மற்றும் பரிபாலனம்
- கூட்டுறவு சங்கங்களின் வருடந்த கணக்காய்வின் பின்னர் நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை அறவிட்டுக் கொள்ளுதல்
- கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சி செயற்பாடு தொடர்பாக கடன் மற்றும் நன்கொடை வழங்குதல்.
- கூட்டுறவு சங்கங்களிற்கான கடன் வழங்கல் மற்றும் கடனை மீள அறவிட்டுக் கொள்ளுதல்.
- வினைத்திறன் மிக்க முதலீடுகளில் நிதியத்தின் பணத்தை முதலீடு செய்தல்.

***உள்ளக நிருவாக பரிபாலனம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கை***

- திணைக்களத்தின் சாதாரண நிருவாகம் / பரிபாலனம்
- திணைக்களத்தின் மனித வள முகமைத்துவம்.
- திணைக்களத்தின் செயற்திறன் வளர்ச்சி
- திணைக்களத்தின் சொத்துக்களின் முகாமைத்துவம்.

### 1.2.கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கட்டமைப்பு

2018 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செய்ற்பாடுகள் 09 பிரிவகளாக ஒருங்கிணைந்து செயற்பாடுகின்றது.

1. நிருவாகம் / பரிபாலன பிரிவு.
2. நிதிப் பிரிவு
3. அபிவிருத்திப் பிரிவு
4. கணக்காய்வுப் பிரிவு.
5. சட்டப் பிரிவு
6. நிதியப் பிரிவு
7. வங்கி ஒழுங்குபடுத்தல் பிரிவு
8. கருத்திட்டப் பிரிவு
9. தகவல் தொழில்நுட்ப பிரிவு

## கூட்டுறவ அபிவிருத்தித் திணைக்களத்தின் கட்டமைப்பு வியூகம்



## 1.3. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொதுவான பரிபாலனம் / நிருவாகம்

இத்திணைக்களத்தின் நிருவாகக கட்டமைப்பில் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற சில விசேட நிகழ்வுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இத்திணைக்களத்தின் பாரிய வெற்றிடமாக காணப்பட்ட 02 உதவி ஆணையாளர் பதவி வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் இருவரை இணைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. முழுமையான ஆளுமையும் அனுபவத்தடன் கூடிய திறமையான இவ் உத்தியோகத்தர்கள் இருவரும் முறையே அபிவிருத்தி மற்றும் நிருவாகப் பிரிவுகளுக்கு உதவி ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டதன் மூலம் இத்திணைக்களத்தின் அன்றாட கடமைகளை திறமையுடனும் விரைவாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது. இதேபோல் தனியார்துறையுடன் கடுமையாக போட்டியிட்டு முன்னோக்கி செல்லும் கூட்டுறவுத்துறைக்கு வழிகாட்டுவதற்க்கும் புதிய தொழில் நுட்பத்தின் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அதுவிடயம் தொடர்பான தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுப்பதற்க்குமான தகவல் தொழில் நுட்பப் பிரிவில் பாரிய வெற்றிடங்களாக காணப்பட்ட தகவல் தொழில் நுட்ப உதவிப் பணிப்பாளர் பதவி நிலைக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெற்று திணைக்களத்தின் ஆளணிப்படையில் இணைந்து கொண்டமை என்பன இவ்வருடத்தில் நடைபெற்ற சில விசேட நிகழ்வுகளாகும். அதேபோன்று மேற்படி பிரிவின் தொழில் நட்ப உதவியாளர் தரம் 11 111 க்கான உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள இவ்வாண்டின் காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

மேலும் திணைக்களத்தின் சட்ட ரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் நோக்குடன் சட்ட உத்தியோகத்தர் ஒருவரை ஆடசேர்ப்புச் செய்யும் பூர்வாங்க செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட ஆளணிப்படை கோவையானது அனுமதி பெற்றக் கொள்ளமுடிந்துள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் விசேட தரத்திலான பதவி நிலை வெற்றிடங்கள் 02 இந்த வருடத்தில் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அதற்க்க ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெற்று கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் மொழிபெயர்பாளர் பதவி வெற்றிடத்தினை நிரப்பிகொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக்கொள்ள தேவையான நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு ஆட்சேர்ப்ப செய்ய அனுப்பிவைக்கப்ட்டுள்ளது. கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கணக்காய்வு முகாமைத்துவ செயற்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைக்குஅமைய உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒன்றிற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது

மேலும் அரச முகாமைத்துவ உதவியாளர்கள் தரம் 111 இல் புதிய நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவையில் தரம் 111க்குரிய உத்தியோகத்தர்கள் சிலரும் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இடமாற்றம் பெற்று வருகைதந்தும் இடம்மாற்றம் பெற்றுச் சென்றும் இருந்தார்கள்.

மேற்குறிப்பிட்டபடி ஆளணிப்படையில் வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது கூட்டுறவுத்துறையின் நிலைபேறான எதிர்காலத்திற்காக திணைக்களத்தின் சிறப்பான செயற்பாட்டுக்காக புதிய பதவி நிலைகளை உருவாக்குவதன் மூலம் திணைக்களத்தை பலப்படுத்தும் நடவடிக்கைகள் நடந்தேறியுள்ளன.

### 1.3.1. ஊழியர்கள் குழுவின் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

இத்திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவி நிலைகளும் அத்தகைய பதவிகளில் 2018.12.31 ஆம் திகதியில் சேவையாற்றியவர்களின் எண்ணிக்கையும் வெற்றிடங்களும் பின்வருமாறு அமைந்திருந்தது

| தொடர் இலக்கம் | பதவிகள் | அனுமதிக்கப்பட்ட தற்போதைய பதவிகளின் எண்ணிக்கை | 2018.12.31ம் திகதியில் கடமையில் ஈடுபட்டோரின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| *சிரேஷ்ட மட்டம்* | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கப் பதிவாளர் இலங்கை நிர்வாக சேவை தரம் 1 | 01 | 01 | 00 |
| | *கூட்டுறவு அபிவிருத்தி உதவி / பிரதி ஆணையாளர்* இலங்கை நிர்வாக சேவை தரம் 11/111 | 04 | 02* | 04 |
| | கணக்காளர் இலங்கை கணக்காளர் சேவை தரம் 11/ 111 | 01 | 01* | 01 |
| | *கூட்டுறவு அபிவிருத்தி உதவி / பிரதி ஆணையாளர்* (திணைக்களம்) | 03 | 03 | 00 |
| | *சட்ட உத்தியோகத்தர்* (திணைக்களம் 11/111) | 01 | 00 | 01 |
| | உதவி பணிப்பாளர் -தகவல் தொழில் நுட்பம் (இலங்கை தகவல் தொழில் நுட்ப சேவை 11/111) | 01 | 01 | 00 |
| | **உப மொத்தம்** | 11 | 08 | 06 |
| புடையான மட்டம் | நிர்வாக அதிகாரி | 01 | 01 | 00 |
| | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அதி விசேட வகுப்பு | 05 | 03 | 02** |
| | மொழி பெயர்பாளர் | 01 | 00 | 01 |
| | தகவல் தொழில் நுட்ப மற்றும் தொடர்பாடல் உத்தியோகத்தர் (இலங்கை தகவல் தொழில் நுட்ப சேவை-2 11/111) | 02 | 00 | 02 |
| | **உப மொத்தம்** | 09 | 04 | 05 |
| துணையான மட்டம் | கூட்டுறவு மேம்பாட்டு ஆய்வு உதவியாளர் | } 62 | 21 } 52 | 10 |
| | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | | 31 | |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 15 | 09 | 06 |
| | தகவல் தொழில் நுட்ப மற்றும் தொடர்பாடல் உதவியாளர் (இலங்கை தகவல் தொழில் நுட்ப சேவை -3 11/111) | 05 | 00 | 05 |
| | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 28 | 26 | 02 |
| | **உப மொத்தம்** | 110 | 88 | 22 |
| | ஓட்டுனர் சேவை | 05 | 04 | 01 |
| ஆரம்ப மட்டம் | திணைக்கள உதவியாளர் சேவை | 15 | 12 | 03 |
| | **உப மொத்தம்** | 20 | 15 | 05 |
| | **மொத்தம்** | 150 | 115 | 38 |

* ஒப்பந்த அடிப்படையில் ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மூவர் (3)இப்பதவி வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டு இப்பதவிக்குரிய கடமைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது

** கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் விசேட தரத்திற்குரிய வெற்றிடங்கள் 02க்காக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் 1 ஐ சேர்ந்த உத்தியோகத்தர் அப்பதவிக்குரிய கடமைகளை ஆற்றிவருவது குறிப்பிடதக்கது

### 1.3.2 புதிய பதவிகளை பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 1 | திரு.கே.எம். இனாமுல் ஹசன் | உதவி பணிப்பாளர் -தகவல் தொழில் நுட்பம் | 2018.07.18 |
| 2 | செல்வி. பி.எஸ்.என். உதயங்கணி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.15 |
| 3 | செல்வி. ஜே. எல். எம். தில்ருக்ஸி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.15 |
| 4; | செல்வி.பி. என். எல் கிறிசாந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.15 |
| 5 | செல்வி..எம்.ஜ.சாரா | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.15 |
| 6 | செல்வி.எ.பி.டி.லக்மாலி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.15 |
| 7 | திரு பி.பி.டி..எஸ் பிரனாந்து | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.15 |
| 8 | செல்வி. கே .பி. இரேஸா | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.16 |
| 9 | திரு. டி. எஸ். யு.விதாரன | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.05.28 |
| 10 | செல்வி. எம். பி. எஸ்.பியுமிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.10.19 |
| 11 | செல்வி. ஓ .டி. விதானஆராச்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.10.19 |
| 12 | செல்வி .எச். கே .எ .எல்.மதுசாணி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.10.19 |
| 13 | திரு. பி. வி .எஸ். த சில்வா | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2018.10.31 |
| 14 | திரு. யு. ஜே .சி. லக்ருவன் | அலுவலக உதவியாளர் சேவை 111 | 2018.11.01 |
| 15 | திரு. ஆர்.எம். ருக்ஸான் | அலுவலக உதவியாளர் சேவை 111 | 2018.11.01 |

### 1.3.3. இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திருமதி .டபிள்யு .என். டபிள்யு. டி. குணவர்தன | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் 1 | 2018.06.13 |
| 2 | திரு. ஏ. எம். நஸ்ரின் | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் 11 | 2018.12.12 |
| 3 | திரு.கே. டபிள்யு. ஏ.ஏ. தாமரச | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை 11 | 2018.03.02 |

### 1.3.4. இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று சென்ற திகதி |
|---|---|---|---|
| 1 | திரு. ஈ.எம் .என்.ஆர். பண்டார | கணக்காளர் | 2018.09.25 |
| 2 | திரு.எஸ்.எ.ஜே.சந்திரகுமார | கூட்டுறவு ஆய்வு மற்றும் மேம்பாட்டு உதவியாளர் | 2018.03.09 |
| 3 | திருமதி.என்.கிமாலி பல்லிய குறுகே | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.03.01 |
| 4 | திரு.பி.எம்.எ. மோகான் த சில்வா | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.03.21 |
| 5 | செல்வி.கே.எ.எம்.பி.கிரியல்ல | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.05.13 |
| 6 | செல்வி.ஆர்.ஈ.எஸ்.ரத்னாயக்க | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.05.13 |
| 7 | செல்வி.கே.எ.என்.சமிந்தனி | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.05.13 |
| 8 | செல்வி ஜே.எல்.என்.டி ஜயசிங்க | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.05.30 |
| 9 | செல்வி ஆர்.எம். கே.சி. விஜேயரத்தின | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2018.05.31 |
| 10 | செல்வி. சி. டி. பனாகொட | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2018.05.02 |
| 11 | செல்வி..யு.டி.எ. யசங்கணி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2018.05.24 |
| 12 | திரு.அர்.எ.அர்.குமார | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2018.05.24 |
| 13 | செல்வி.எ.என்.கீம்பியகெட்டி | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2018.05.25 |
| 14 | செல்வி.ஆர்.எம்.டி.கே. ரத்னாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2018.05.28 |
| 15 | செல்வி. கே .பி. இரேஸா | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2018.12.03 |
| 16 | செல்வி. நதிக்கா முனசிங்க | அலுவலக உதவியாளர் சேவை (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பரீட்சையில் சித்தி பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்றார்) | 2018.05.14 |

## 01.4. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆளணிப்படையின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்

### 01.4.1. உள்நாட்டு பயிற்சி நெறிகள்

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின ஊழியர்குழுவின் அங்கத்தவர்கள் கீழ்காட்டப்பட்டுள்ளவாறு உள்நாட்டு கல்வி மற்றும் பயிற்சி நெறிகளில் அல்லது கருத்தரங்ககளில் பங்குபற்றியிருந்தனர்.

| தொடர் இல | பயிற்சிநெறி | பயிற்றுவித்த நிறுவனத்தின் பெயர் | காலம் | பங்கு பற்றிய உத்தியோகத்தர் பெயர், பதவி |
|---|---|---|---|---|
| 01 | ஆதனங்கள் மற்றும் உபகரணங்களுக் கிடையேயான தொடர்பு மற்றும் நிலையான சொத்துக்களின் நிலைபேறான தன்மையும் அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 2018.02.26 | திருமதி. கே .டி..ஆர் நிலந்தி (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை )<br>செல்வி. யு.எல்.டி .தனஞ்சலி (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை )<br>திரு. எஸ்.எ.ஜே. மீமனகே (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை )<br>திரு .கே.எ.என் ரத்னாயக்க (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |
| 02 | ஆராச்சி பயிற்சி நெறிகளுக்கான ஒப்படை தயாரிப்பது தொடர்பான பயிற்சி நெறி | NICD தேசிய கூட்டுறவு அபிவிருத்தி பயிற்சி நிறுவகம் | 2018.04.23/24 | திரு கே.பி.மாறசிங்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>செல்வி.ஆர்.பி.நிர்மலா.பி. கருனாசேன கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>செல்வி.ஆர்.எஸ்.எஸ்.ரத்னாயக்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>திரு.எ.என் ரஞ்சன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 03 | களஞ்சிய வசதிகள் தொடர்பான முகாமைத்துவம் கொள்வனவு நடைமுறைகள் | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம . | 2018.04.26 - 27 | திரு. எஸ்.எ.ஜே. மீமனகே (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |
| 04 | சம்பள மாற்றங்களுக்கான செயலமர்வு | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 2018.05.21-22 | திருமதி .என்.எ.எஸ்.பீரீஸ் (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |
| 05 | அலுவலக உபகரணங்களின் வினைத்திறன் தொடர்பான செயலமர்வு | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 2018.05.21 - 22 | திரு. எஸ்.எ.ஜே. மீமனகே (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |
| 06 | பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு ( TOT ) | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 2018.05.14 – 18 | திருமதி. கே.அர்.டி. சோமரத்தின அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 07 | பெறுகைகளின் நடைமுறைகள் தெடர்பான செயலமர்வு | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 018.5.31 - 2018.06.01 | திருமதி. என்.எம்.மினோலி (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை )<br>திரு.ஆர்.எம்.சி.எஸ். ரத்னாயக்க (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |
| 08 | அலுவலக உதவியாளர் சேவையின் கடமைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 2018.06.05/06 | திருமதி டயானா தசானாயக்க அலுவலக உதவியாளர் சேவை |
| 09 | அரச பெறுகைகளின் நடைமுறைகள் தொடர்பான செயலமர்வு | (SDFL) வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் | 2018.06.20 முதல் பிரதி 10 வெள்ளி கிழமைகள் | திரு. கே .டபிள்யு. எ. அருயுன .தமரச (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |

### 1.4.2 சர்வதெச பயிற்சி

2018ஆம் வருடத்தில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் குழாத்தின் அங்கத்தவர்களில் பின்வருபவர்கள் சர்வதேச கல்வி மற்றும் பயிற்சி நெறிகளில் பங்குபற்றியிருந்தனர்.

| தொடர் இல | பயிற்சி பெற்ற பாடநெறி | காலம் | நடைபெற்ற நாடு | பங்கு பற்றிய உத்தியோகத்தர் பெயர் மற்றும் பதவி |
|---|---|---|---|---|
| 01 | International programmes on Women's Development through income Generating Activities | 2018.03.19-2018.03.22 | இந்தியா (பூனே) | எல்.எச்.எம். புத்திமா லன்சகார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 02 | International programmes on Women's Development through income Generating Activities | 2018.03.19-2018.03.22 | இந்தியா (பூனே) | எப்.பி.ஜ.ஜி.தில்ரூக்சி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 03 | SDG 12 - Responsible Consumption and Production, | 2018.04.23-2018.04.26 | கோலாலம்பூர் மலேசியா | திரு .எஸ்.எல் நஸீர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் |
| 04 | International programmes on Renewable Energy Management for Cooperatives | 2018.08.20-2018.08.24 | இந்தியா (பூனே) | ஈ.எம்.எ.சி எக்கநாயக்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 05 | International programmes on Renewable Energy Management for Cooperatives | 2018.08.20-2018.08.24 | இந்தியா (பூனே) | ஜி.எச்.அயோதியா விரசிங்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 06 | International Programe on Development of Rural financing Institutions and Cooperatives | 2018.10.08-2018.10.12 | நேபாளம் | ஜே.எம்.பி.பி.ஜேயசுந்தர கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 07 | International Programe on Development of Rural financing Institutions and Cooperatives | 2018.10.08-2018.10.12 | நேபாளம் | பி.டி.ரி.எம்.தி சில்வா கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 08 | Annual Study Tour of Sri Lanka Cooperative Rural Bank Federation Ltd. | 2018.08.19-2018.08.25 | பிரான்ஸ் / நெதர்லாந்து | திரு .எஸ்.எல் நஸீர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் |
| 09 | Seminar on Tourism Development for Developing Countries in 2018 | 2018.09.01-201809.10 | சீனா | பி.எம்.எம் பந்துல உதவி ஆணையாளர் |
| 10 | Seminar on Tourism Development for Developing Countries in 2018 | 2018.09.01-201809.10 | சீனா | பி.சி. ராஜயபக்ஸ கூட்டுறவு ஆய்வு மற்றும் மேம்பாட்டு உதவியாளர் |
| 11 | கூட்டுறவுத்துறை சார்ந்த கல்விச் சுற்றுலா | 2018.09.07-2018.09.12 | நேபாளம் | ரி.எ.ஜே.ஆர் .ஜயத்திலக்க எழுதுனர் கூட்டுறவு நிதியம் |
| 12 | கூட்டுறவுத்துறை சார்ந்த கல்விச் சுற்றுலா | 2018.09.07-2018.09.12 | நேபாளம் | திரு .ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயக்க (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ) |
| 13 | 13th ICA-AP பிராந்திய பொதுக்கூட்டம் மற்றும் அதனோடு இணைந்த நிகழ்வுகள் | 2018.11.26-2018.11.30 | ஈரான் | திரு .எஸ்.எல் நஸீர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் |
| 14 | கூட்டுறவு வியாபாரக் கட்டமைப்பின் ஊடாக பால்ப்பண்ணை அபிவிருத்தி | 2018.12.10-2018.12.14 | இந்தியா | திருமதி. கே.அர்.டி. சோமரத்தின அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 15 | டுறவு வியாபாரக் கட்டமைப்பின் ஊடாக பால்ப்பண்ணை அபிவிருத்தி | 2018.12.10-2018.12.14 | இந்தியா | எச்.எம்.ஜி.பி. கேரத் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) |

01.4.3. **திணைக்களத்தின் அனுசரனையின் மூலம் நடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்கு.**

| **தொடர் இலக்கம்** | **திகதி** | **பயிற்சி வேலைத்திட்டம்** | **பங்கு பற்றிய உத்தியோகத்தர்கள்** |
|---|---|---|---|
| 01 | 2018.07.31 | இணைய வலையமைப்பும் கணணிப் பயன்பாடும் தொடர்பான பயிற்சி நெறி | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 15 உத்தியோகத்தர்களுக்கு |
| 02 | 2018.08.09/10 | வ/ப இலங்கை முயற்சியாண்மை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (கூட்டுறவுத்துறையும அதன் சட்டரீதியான செயற்பாடுகளும்) | கூட்டுறவுச் சங்கங்களின் உத்தியோகத்தர்கள் |
| 03 | 2018.09.08 | அரச உத்தியோகத்தர்களின் ஒழுக்காறு தொடர்பான செயலமர்வு | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் |
| 04 | 2018.09.25 | அரச பெறுகைகள் மற்றும் கொள்வனவு தொடர்பான நடைமுறைகள் | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் |
| 05 | 2018.11.01 திகதி முதல் ஒரு வருட காலத்திற்க்கு | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சான்றிதள் பத்திர பாடநெறி | 2017.11.07ஆம் திகதி நியமனம் பெற்றுக் கொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 09பேர்கள் |
| 06 | 2018.11.27 | அலுவலக நடைமுறை தொடர்பான செயலமர்வு | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும |
| 07 | 2018.12.18 | நிதி பிரமாணங்கள் மற்றும் நிதி ஒழுங்குகள் தொடர்பான பயிற்சி செயலமர்வு | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும |

# 02 அத்தியாயம்

## அபிவிருத்தி செயற்பாடுகள்

### 02.01. 2018 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்புக்களை பதிவுசெய்தல்

2018ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்

| இல | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | வ/ப தேசிய விஞ்ஞான மற்றும் ஆராட்சி கூட்டுறவுச் சங்கம். | சமு 57 | 2018.02.21 |
| 02 | வ/ப இலங்கை ஊடகவியலாளர்களின் கூட்டுறவுச் சங்கம். | சமு 58 | 2018.02.22 |
| 03 | வ/ப இலங்கை கைத்தறி நெசவாளர்களின் சந்தைப்படுத்தல் மற்றும் முயற்சியாண்மையாளர்களின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். | சமு 59 | 2018.05.28 |
| 04 | வ/ப இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். | சமு 60 | 2018.08.08 |
| 05 | வ/ப அகில இலங்கை வெளிநாட்டு மொழிக்கல்வி ஊக்குவிப்பு கூட்டுறவுச் சங்கம். | சமு 61 | 2018.09.07 |
| 06 | வ/ப அகில இலங்கை சிறிய மற்றும் மத்திய அளவிலான அரிசியாலை உரிமையாளர்களின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். | சமு 62 | 2018.09.07 |
| 07 | வ/ப இளைஞர் வலுவூட்டல் கூட்டுறவுச் சங்கம் | சமு63 | 2018.10.05 |
| 08 | வ/ப ஹதபிம கூட்டுறவுச் சங்கம் | சமு 64 | 2018.10.05 |

### 02.2 கூட்டுறவு சங்கத்தின் துணைவிதிகளில் திருத்தம்

| | கூட்டுறவு சங்கத்தின் /சம்மேளனத்தின் பெயர் |
|---|---|
| 01 | வ/ப இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை |
| 02 | வ/ப நிலஅளவை திணைக்களத்தின நில அளவை உதவியாளா்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் |
| 03 | வ/ப இலங்கை துறைமுக கப்பல் சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கம் |

| | |
|---|---|
| 04 | வ/ப சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் பரிசோதனை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 05 | வ/ப கல்வித் துறைசார் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |
| 06 | வ/ப இலங்கை சுகாதார சேவை பணியாளர்களின் அபிவிருத்தி சேவை சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 07 | வ/ப இலங்கை கூட்டுறவு வள முகாமைத்துவ கூட்டமைப்பு. |
| 08 | வ/ப இலங்கை கூட்டுறவு நெசவுக் கைத்தொழில் சம்மேளனம். |
| 09 | வ/ப இலங்கை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் |
| 10 | வ/ப இலங்கை தொழில் நுட்ப அபிவிருத்தி தேசிய கூட்டுறவு சங்கம் |
| 11 | வ/ப இ.போ.ச. ஊழியர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் |
| 12 | வ/ப புகையிரத பாதை வேலை திணைக்களத்தின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |

## 02.3 கூட்டுறவு சங்கத்தின்/ சம்மேளனத்தின் தேர்தல்கள் செயற்பாடுகள்

| | கூட்டுறவு சங்கத்தின் /சம்மேளனத்தின் பெயர் |
|---|---|
| 01 | **வ/ப** அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு திணைக்களத்தின் பணியாளர்களின் கூட்டுறவு வங்கி சங்கம். |
| 02 | வ/ப சுகாதாரசேவை நிதி மற்றும் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 03 | வ/ப தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 04 | வ/ப இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனம். |
| 05 | வ/ப அகில இலங்கை அப்பியாக புத்தக உற்பத்தியாளாகள் கூட்டுறவுச் சங்கம் |
| 06 | வ/ப இலங்கை கூட்டுறவு நெசவுக் கைத்தொழில் சம்மேளனம். |
| 07 | வ/ப உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணியாளர்களின் சிக்கன கடனுதவி மற்றும் கூட்டுறவு சங்கம் |
| 08 | வ/ப இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம். |
| 09 | வ/ப சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் பரிசோதனை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 10 | வ/ப நீர் வழங்கள் சபையின் ஒருமித்த ஊழியர்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |

| | |
|---|---|
| 11 | வ/ப இலங்கை தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சம்மேளனம் |
| 12 | வ/ப துறைமுக அதிகார சபை ஊழியர்களின் நலன்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம |
| 13 | வ/ப இலங்கையின் மகளிர்களுக்கான அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கம். |
| 14 | வ/ப இலங்கை கூட்டுறவு கைத்தொழில் சம்மேளனம் |

## 02.4. கூட்டுறவுச் சங்கங்களின் நியதிச்சட்ட சட்டரீதியான கணக்காய்வு செயற்பாடுகள்

இத் திணைக்களத்தினது சட்டரீதியான பொறுப்புகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய ஆரம்ப கூட்டுறவச் சங்கங்கள் மற்றும் தேசிய ரீதியான கூட்டுறவச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களின் கணக்காயவைத் திட்டமிட்ட மற்றும் நிறைவடைந்த கணக்காய்வு தொடாபாக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆண்டு வரையிலான நிலை கீழ்க்கா்டப்படுமாறு அமையும்

| வருடம் | திட்ட மிட்ட கணக்காய்வு | நிறைவு செய்த கணக்காய்வு | நிறைவு செய்த கணக்காய்வின் சதவீதத்தில் |
|---|---|---|---|
| 2013 | 74 | 61 | 82% |
| 2014 | 68 | 44 | 64.7% |
| 2015 | 80 | 11 | 13.75% |
| 2016 | 102 | 37 | 36.27% |
| 2017 | 58 | 43 | 74.13% |
| 2018 | 108 | 56 | 60.48% |

**6ஆண்டு காலப் பகுதியில் திட்ட மிட்ட கணக்காய்வு மற்றும் நிறைவு செய்த கணக்காய்வு**




## 02.5 சட்ட செயற்பாடுகள்

சட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய பிரதான செயற்பாடுகளாக பின்வரும் நடவடிக்கைகளை சுருக்கமாகக் காட்டமுடியும்.

- கூட்டுறவுச் சங்கங்களிற் குரிய சட்டதிட்டங்கள், விதிகள் மற்றும் யாப்பு தொடர்பில் வரைவிலக்கணத்தை முன்வைத்தலும் மாகாண ஆணையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான பிரச்சனைகள் தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் தேவையான ஒத்துழைப்பை வழங்கல்.
- மாதிரி துணைவிதிகளை இயற்றுதுலும் இயற்றப்பட்ட துணைவிதிகளை அப்பியாசம் செய்தல்.

- கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 58 ஆவது உறுப்புரையின் கீழ் சம்மேளனம் அல்லது சங்கங்களின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் நடுத்தீர்வுக்குரிய முறைப்பாட்டு மனுக்களின் மீதான உரிய விசாரணைகளை மேற்கொள்ளுதல் தீர்புகளை வழங்குதல் மேன்முறையிடுகளை விசாரணை செய்தல் மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்புக்களை நீதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்தல்.
- கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை பிரதிவாதிகாளகக் கொண்டு மாவட்ட மேன்முறையீட்டு மற்றும் உச்ச நீதிமன்றத்தினால் முன்வைக்கப்படும் பிரச்சனைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினுடாக தேவையான விபரங்களையும் மதிப்புரைகளையும் பெற்றுக் கொண்டு அதற்கமைய நடவடிக்கை எடுத்தல்.

02. **5.1 பிணக்குகளுக்கான நடுவர்தீர்ப்பு**

1992 இலக்கம் 11 மற்றும் 1983 இலக்கம் 32 கொண்ட திருத்தங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 இலக்கம் 5 கொண்ட கூட்டுறவு சங்கச் சட்டம் 58 வது பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி கூட்டுறவு சங்கங்களின் நடுவர்தீர்ப்புக்காக 2018 ஆண்டு திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற கோப்புக்கள் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | |
|---|---|
| 2017 ஆம் ஆணடில் நடுவர்தீர்ப்புக்கு வழங்குவதற்காக உள்ள கோப்புக்களின் எண்ணிக்கை | -157 |
| 2018 ஆண்டு காலப்பகுதியில் நடுவர்தீர்ப்புக்கு வழங்குவதற்காக கிடைக்கப் பெற்ற கோப்புக்களின் எண்ணிக்கை | -35 |
| நடுவர்தீர்ப்பு செயற்பாடுகளை நிறைவு செய்து தீர்ப்பு வழங்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை | -295 |
| மீளாய்வு செய்யப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை | -188 |

02.**5.2 நீதிமன்றத்தின் மூலம் நடுத்தீர்ப்பை வலுப்பெறச் செய்தல்**

1972 இலக்கம் 5 கொண்ட கூட்டுறவு சங்கச் சட்டம் 58 வது பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடுத்தீர்ப்புக்காக ஒப்படைக்கப்பட்ட பிணக்குகளிற்ககு நடுத்தீர்ப்பு வழங்கியதன் பின் சம்பந்தப்பட்ட தொகை அறவிடப்படவில்லை எனின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் மூலம் அத்தகைய தொகையானது தண்டப்பணத்துடன் அறவிடப்படுவதற்கு உரிய நீதவான் நீதிமன்றத்தின் மூலம் வலுவுட்டல் செய்யப்படுவதுடன் அவ்வாறு நிதிமன்றத்தின் ஊடாக அறவிடப்பட்ட தொகையானது மீள சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்க்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்த எண்ணிக்கை- 129

நிதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்ட தண்டப்பண பெறுமதி ரூபா -15,523,529.71

சங்கத்திற்க்கு விடுவிக்கப்பட்ட அறவீட்டு பணப் பெறுமதி ரூபா -10,445,796.71

## 02. 6 கூட்டுறவு நிதிய முகாமைத்துவம்

1972 இல 05 ஐக் கொண்ட கூட்டுறவச் சட்டத்தின் 43 (1) (ஆ) உறுப்புரை மற்றும் 57 (3) உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்படும் நிதியம் இவ்வாண்டினுள்ளும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொறுப்பில் பேணப்படுவதுடன் அந்நிதியத்தினர் செலவு மற்றும முதலீடு செய்தல் தொடர்பான நடவடிக்கைகள் நிதியக் குழுவின் தீர்மானங்களுக்கேற்ப நிகழ்த்தப்படும். அந்நிதியத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்ற சங்கங்களிடமிருந்து தொகையை அறவிடுதல், செலவு செய்தல் முதலீடு செய்தல் கடன் மற்றும் நன்கொடை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை கௌரவ அமைச்சின் மேற்பார்வையின் கீழும் வழிகாட்டலின் கீழும் அமைச்சின் செயலாளரின் பங்களிப்புடன் கூடிய நிதியக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய முகாமை செய்யப்படுகின்றது

* கூட்டுறவு நிதியம்
* கூட்டுறவு மிகை நிதியம்

### 02.6. 1 கூட்டுறவு நிதியம்

கூட்டுறவு சங்கங்களின் சுதந்திரத்திற்கு முன்னரான கட்டளைச் சட்டம் (107வது அத்தியாயம்) 46 பந்தியல் கீழ் உள்ள இல 10086 மற்றும் 1950.03.24 திகதி வெளியிட்டப்பட்ட வர்த்தமானிக்கிணங்க அமைக்கப்பட்ட இந்நிதியமானது கௌரவ அமைச்சரின் வளிகாட்டலின் கீழும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது

தேசிய திணைக்களத்தின் இந்நிதியத்திற்கான பங்களிப்பு இத்திணைக்களத்தின் கண்காணிப்பு மேற்பார்வை மூலம் கட்டுப்படுத்தப்படுகின்ற கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் நாடளாவிய ரீதியான செயற்பாட்டை கொண்ட ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

### 02. 6. 2 கூட்டுறவு மிகை நிதியம்

இலக்கம் 93/5 கெண்ட 1974 ஜனவரி மாதம் 10 திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமனிக்கமைய 44(1) முதல் 44(111) வரை குறிப்பிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சங்கங்களை முடிவுறுத்தும் போதான சந்தர்ப்பத்தில் அத்தகைய சங்கத்தின் எதாவது கடன் வழங்கியவர்களுக்கு செத்துக்களை பகிர்ந்தழிக்கும் யோசனையின் கீழ் தனக்கு கிடைக்க வேண்டியவை தொடர்பாக மிதியை பெற்றுக்கொள்வதற்காக நிதி ரீதியான உதவியை வழங்கல் இந்த ஆண்டு காலப்பகுதியில் மாகாண கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்காக சலுகை வட்டி வீதத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது.

02.7. 2018 ம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கம் மற்றும் செலவினங்களை ஏற்றல்

மீண்டெழும் செலவீனங்கள்.

| செலவு விடய இலக்கம் | தொகுதி/ செலவு விபரம்/ விடயங்கள் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா. | 2018.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூ. |
|---|---|---|---|
| 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 36,450,000.00 | 36,315,716.95 |
| 1002 | மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின சம்பளம் | 1,200,000.00 | 1,199,712.96 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 16,425,000.00 | 16,325,773.49 |
| 1101 | போக்குவரத்து செலவுகள் - உள்நாடு | 1,500,000.00 | 1,498,875.78 |
| 1102 | போக்குவரத்து செலவுகள் - வெளிநாடு | 600,000.00 | 600,000.00 |
| 1201 | எழுதுபொருள் மற்றும் அலுவலக தேவைகள் | 1,500,000.00 | 1,461,971.70 |
| 1202 | எரிபொருள் | 2,000,000.00 | 1,858,119.27 |
| 1203 | உணவுப் பொருட்கள் மற்றும் சீருடை | 150,000.00 | 103,244.00 |
| 1301 | வாகனங்கள் | 1,850,000.00 | 1,846,423.96 |
| 1302 | இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும். | 600,000.00 | 565,605.64 |
| 1402 | அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு | 1,665,000.00 | 1,664,984.75 |
| 1403 | மின்சார மற்றும் குடிநீர் | 3,000,000.00 | 2,999,142.80 |
| 1404 | குத்தகை மற்றும் உள்ளூராட்சி வரி | 310,000.00 | 308,645.98 |
| 1409 | ஏனையவை | 2,717,000.00 | 2,650,767.34 |
| 1505 | ஏனைய உதவி மற்றும் பங்களிப்பு தொகை | 450,000.00 | 434,320.01 |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்து கடன் வட்டி | 650,000.00 | 642,650.38 |
| | மொத்தம் | 71,067,000.00 | 70,475,955.01 |

**மூலதனச் செலவீனங்கள்.**

| செலவு விடய இலக்கம் | தொகுதி/ செலவு விபரம்/ விடயங்கள் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா. | 2018.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூ. |
|---|---|---|---|
| 2002 | இயந்திரங்களும் இயந்தரமயப்படுத்தலும். | 200,000.00 | 110,700.00 |
| 2003 | வாகனங்கள் | 500,000.00 | 479,109.40 |
| 2102 | தளபாடங்களும் உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும். | 500,000.00 | 120,527.50 |
| 2103 | இயந்திரங்களும் இயந்தரமயப்படுத்தலும். | 500,000.00 | 190,790.00 |
| 2202-1 | கூட்டுறவு இயக்கம் தெடர்பான பிரச்சாரம் சமூபதீபனி கூட்டுறவு பத்திரிகை பின்னிணைப்பு அச்சிடல் | 10,000,000.00 | 9,999,928.30 |
| 2202-2 | ‘‘நன சக்தி’’ பாடசாலை கூட்டுறவு சங்கங்களுக்கான மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் | 6,000,000.00 | 1,954,266.00 |
| 2202-3 | நிதிசேவை ஒழுங்குபடுத்தல் - கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல் | 5,000,000.00 | 1,149,207.25 |
| 2202-4 | தகவல் தொழில்நுட்ப தொகுதியை நிர்மானித்தல் | 1,000,000.00 | 78,463.00 |
| 2202-5 | கைத்தொழில் மற்றும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்தல் வேலைத் திட்டடம் | 8,000,000.00 | 237,902.75 |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 675,000.00 | 525,884.00 |
| | **மொத்தம்** | 32,375,000.00 | 14,882,778.32 |

**மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகளுக்கான சுருக்கம்.**

| இல | விபரம் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா | 2018.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூபா |
|---|---|---|---|
| 1 | மீண்டெழும் செலவுகளின் மொத்தம் | 71,067,000.00 | 70,475,955.01 |
| 2 | மூலதனச் செலவுகளின் மொத்தம் | 32,375,000.00 | 14,882,778.32 |
| | **மொத்தம்** | **103,442,000.00** | **85,358,733.00** |

## 2.8 கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல்

### 2018 ஆம் ஆண்டு கிராமிய வங்கி மற்றும் நிதிச் சேவை கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தம் பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்

- கூட்டுறவுச் சங்கங்களின் தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரித்தல் மற்றும் அத்தரவுகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு அனுப்பிவைத்தல்.
- சிராமிய வங்கிகளில் செயற்பாட்டு மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிநெறி செயலமர்வுகள் இரண்டை நடாத்தியமை.
- கூட்டுறவுக் கிராமிய வங்கி சணச மற்றும் ஏனைய நிதிச் சேவை கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான சட்ட மூலத்திற்கான சட்ட வரைபை உருவாக்குதல்
- கூட்டுறவுக் கிராமிய வங்கி சணச மற்றும் ஏனைய நிதிச் சேவை கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான சட்ட மூலத் தயாரிப்புக்கான சட்ட வரைபை உருவாக்கும் செயற்குழுவின் கூட்டங்கள் இரண்டை நடாத்தி சட்ட மூலத்தின் உள்ளடக்கப்பட்ட விடயம் தொடர்பாக துறை சார்ந்தவர்களிற்க்கு தொளிவுபடுத்தல் மற்றும் இறுதி வரைபை ஆக்கம் பணிகளை ஆரம்பித்து வைத்தல்.
- தேசிய வங்கி ஒழுங்குபடுத்தல் செயற்குழு கூட்டங்களை நடாத்துதல்
- நிதி சேவை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 11 இல் திடீர் பரிசோதனைகள் நடாத்தியமை.
- சுற்றுநிருபம் வெளியிட்டு வைத்தல்
    - வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் நிதி நிலைமை அறிக்கை பெற்றுக் கொள்வது தொடர்பான 2018/01 சுற்றுநிருபம.
    - திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான 2018/02 சுற்றுநிருபம
- கூட்டுறவுக் கிராமிய வங்கி மற்றும் நிதிச் சேவையில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமை அறிக்கைகளை பெற்று கொள்ளுதல் மற்றும் அவற்றை பகுப்பாய்வு செய்தல்.

## 02. 9 கருத்திட்டங்களை செற்படுத்தல்

**நனசக்தி பாடசாலை கூட்டுறவு சங்க ஊக்குவிப்பு வேலைத்திட்டம்**

நனசக்தி பாடசாலை கூட்டுறவு சங்க ஊக்குவிப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டு திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வேலைத்திட்டத்தின் பிரதான இலக்கு தேசிய மட்டத்தில் பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதலாகும். 2018 ஆம் ஆண்டு இவ் வேலைத் திட்டமானது பாரிய வெற்றியடைந்த வேலைத்திட்டமாக திணைக்களத்தால் முன்னேடுக்கப்பட்டிருந்தது. இதன்போது மேற் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமமாறு அமைந்திருந்தது.

**2018 ஆம் ஆண்டு நனசக்கதி பாடசாலை கூட்டுறவுச் சங்க ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற கா.பொ.த .(சா.த.) பரீட்சை தொடர்பான கருத்தரங்கு**

| தொடரிலக்கம் | திகதி | இடம் | பங்குபற்றிய பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய பாடசாலைகள் |
|---|---|---|---|---|
| 01 | 2018.09.20<br>2018.09.21 | கண்டி / தெல்டெனிய தேசிய பாடசாலை | 300 | கண்டி / தெல்டெனிய தேசிய பாடசாலை<br>கண்டி / உடிஸ்பத்து துணைநிலை பாடசாலை<br>கண்டி / அம்பலாக் கனிஷ்ட பாடசாலை<br>கண்டி / தர்மாசோக்க முதன்மை பாடசாலை<br>கண்டி / வாகல கனிஷ்ட பாடசாலை |
| 02 | 2018.09.28<br>2018.09.29 | அனுராதபுரம் / மைத்திரிபால சேனானயக்க மத்திய மகாவித்தியாலயம். | 300 | அனுராதபுரம் / மைத்திரிபால சேனானயக்க மத்திய மகாவித்தியாலயம்.<br>அனுராதபுரம் / கொரவப்பொத்தான ரூவான்வலி மத்திய மகாவித்தியாலயம் |
| 03 | 2018.10.23<br>2018.10.25 | கம்பஹா / வெயாங்கொட பண்டாரநாயக்க மத்திய மகாவித்தியாலயம் | 350 | கம்பஹா / வெயாங்கொட பண்டாரநாயக்க மத்திய மகாவித்தியாலயம்<br>. |
| 04 | 2018.10.29 | ஹங்குரான்கெத்த காலாச்சார மத்திய நிலையம் | 550 | நுவரேலியா/ தியதிலாக்க மகாவித்தியாலயம்<br>நுவரேலியா/ விக்ரேரியா தேசிய பாடசாலை<br>நுவரேலியா/ பல்லேபொவல மகாவித்தியாலயம்<br>நுவரேலியா/ சிறிமாவே மகளீர் மகாவித்தியாலயம்<br>நுவரேலியா/ பதியபலல்ல மகாவித்தியாலயம்<br>நுவரேலியா/ ரஹதுங்கொட மகாவித்தியாலயம்<br>நுவரேலியா/ உடகலஉட மகாவித்தியாலயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நுவரேலியா/ உடகலஉட மகாவித்தியாலயம் |
| 05 | 2018.11.01<br>2018.11.02 | புத்தளம் / ஆனமடுவ கன்னங்கர மாதிரி மகா வித்தியாலயம | 350 | புத்தளம் / அனந்த தேசிய பாடசாலை<br>புத்தளம் / ஆனமடுவ கன்னங்கர மாதிரி மகா வித்தியாலயம்<br>புத்தளம் / அட்டிக்குளம் கனிஷ்ட பாடசாலை<br>புத்தளம் / தல்கஸ்வெவ கனிஷ்ட பாடசாலை<br>புத்தளம் / பாலியகமசிறி புத்ரா கனிஷ்ட பாடசாலை<br>புத்தளம் / கொட்டகம் கனிஷ்ட வித்தியாலயம்<br>புத்தளம் / செங்கட்டிகுளம் கனிஷ்ட பாடசாலை<br>புத்தளம் / திவுல்வெவ கனிஷ்ட பாடசாலை |
| 06 | 2018.11.06<br>2018.11.07 | அம்பாறை நகர மண்டபம் | 250 | அம்பாறை / பண்டரநாயக்க கல்லூரி<br><br>அம்பாறை / டி.எஸ்.சேனானாயக்க தேசிய பாடசாலை |
| 07 | 2018.11.10<br>2018.11.11 | மெனராகலை /அதிமலே மகா வித்தியாலயம | 160 | மெனராகலை /அதிமலே மகா வித்தியாலயம்<br><br>மெனராகலை /தேசிய பாடசாலை<br><br>மெனராகலை /கெமுனுபுர மகா வித்தியாலயம்<br><br>மெனராகலை /திஸ்பாபுர மகா வித்தியாலயம் |
| 08 | 2018.11.27<br>2018.11.28 | கல்பிட்டி / அல் ஆக்ஸா தேசிய பாடசாலை | 250 | கல்பிட்டி / அல் ஆக்ஸா தேசிய பாடசாலை |
| 09 | 2018.11.30 | குருநாகல் / கொபேகணி தேசிய பாடசாலை | 200 | குருநாகல் /கொபேகணி தேசிய பாடசாலை |

**2018 ஆம் ஆண்டு நனசக்கதி பாடசாலை கூட்டுறவுச் சங்க ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கு**

| தொடரிலக்கம் | திகதி | இடம் | பங்குபற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2018.11.24 | கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி யாழ்ப்பாணம | 500 |

**2018 ஆம் ஆண்டு நனசக்கதி பாடசாலை கூட்டுறவுச் சங்க ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற மிகிந்தலே ராஜரட்ட பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு**

| தொடரிலக்கம் | திகதி | இடம் | பங்குபற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2018.12.19 | மிகிந்தலே ராஜரட்ட பல்கலைக்கழகம் | 500 |

**நனசக்கதி பாடசாலை கூட்டுறவுச் சங்க ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாடசாலை கூட்டுறவு சங்கங்களின் விபரம் பின்வருமாறு**

1. உத்தேச வ/ ப அல் அக்ஸா தேசிய பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
2. உத்தேச வ/ ப அனந்த நன உதான பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
3. உத்தேச வ/ ப கன்னங்கர சக்தி பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
4. உத்தேச வ/ ப ஜயந்தி பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
5. உத்தேச வ/ ப வெயாங்கொட பண்டாரநாயக்க மத்திய பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
6. உத்தேச வ/ ப கொரண ராஜகிய பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
7. உத்தேச வ/ ப மின்னேரிய தேசிய பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
8. உத்தேச வ / ப விலாயாய மத்திய பாடசாலை கூட்டுறவுச் சங்கம்

❖ **கோப்சிட்டிகள் 100 ஐ அபிவிருத்தி செய்தல்**

நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவு நவின சந்தைதொகுதி வலையமைப்பை புதிய தோற்றப் பொலிவுடனும் புதிய எண்ணக்கருவுடனும் சந்தைக்கு மீள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரம்ப கட்டமாக இவ்வருடத்தில் 100 கோப்சிட்டிகள் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. கூட்டுறவாளர்கள் மற்றும் இலங்கை நுகர்வோரின் ஆகிய இருதரப்பும் பயன்பெறும் வகையில் இக்கருத்திட்டமானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது இந்த ஆண்டு நிறைவடையும் போது கூட்டுறவு நவீன சந்தைகள தொகுதிகள் 17 அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன.

❖ **சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசியாலை உரிமையாளர்களுக்கு உதவித்திட்டம்**

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படும் இந்த உதவித் திட்ட செயற்பாடுகளின் மூலம் நாட்டின் 05 மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்கள் உள்ளடக்கப்படும் வகையில் பின்வரும் பகுதிகளில் இத்கருத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

| தொடர் இலக்கம் ; | மாகாணம் | மாவட்டம் |
|---|---|---|
| 01 | வட மத்திய | பொலன்னறுவ அனுராதபுரம் |
| 02 | வடமேல் | குருநாகல் புத்தளம் |
| 03 | தெற்க்கு | ஹம்பாந்தோட்டை |
| 04 | கிழக்கு | அம்பாறை மட்டகளப்பு |
| 05 | வட மத்திய | கண்டி |

❖ **வ /ப இலங்கை கூட்டுறவு கைத்தொழில் மகா சம்மேளனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்களிப்பை வழங்கியிருந்தமை**

தும்பு நார் உற்பத்தி செய்கின்ற பிரிவில் கூரையானது பழுதடைந்திருந்தது அதை புதுப்பித்துக் கொள்வதற்க்கும் டிகோடிடேற்டட் வகை நார் உற்பத்திக் கருத்திட்டத்திற்க்கும் நிதி உதவி வழங்கியதன் மூலம் கூட்டுறவு சமூகத்தினை வலுப்படுத்துவதற்கு இந்த வருடம் திணைக்களமானது தனது பங்களிப்பை வழங்கியிருந்தது.

❖ **தாராபுரம் கூட்டுறவு கிராமம் கருத்திட்டத்தை செயற்படுத்தல்**

கூட்டுறவு கிராமம் கருத்திட்டத்தின் கீழ் இந்த வருட காலப்பகுதியில் தாரபுரம் கிராமத்தை அண்டிய பகுதியில் குளத்தை புனரமைத்தல் மற்றும் கருத்தரங்க மண்டபம் ஒன்றை நிர்மாணிக்கும் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றது.

❖ **Road map 2020 கருத்திட்டத்தின் mile stone 05**

Road map 2020 கருத்திட்டத்தின் mile stone 05இன் கீழ் கூட்டுறவுத்துறையின் பல தரப்பட்ட துறைகளை உள்ளடக்கும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னேடுக்கப்பட்டு வருகின்றது.

Coop T shop கருத்திட்டமானது அரம்பிப்பதற்க்கு வ/ப நீர்கொழும்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்க்கு நிதி உதவி வழங்கி இத்திட்டத்தை முன் நகர்த்தியது இவ்வருடத்திலே நடைபெற்ற நிகழ்வாகும்.

- **96ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினக் கொண்டாட்டங்கள்**

96 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை 2018 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் கூட்டுறவாளர்கள் மிகவும் உணர்ச்சி பூர்வமாகவும் மிகுந்த ஆர்வத்துடனும் கொண்டாடிருந்தனர். தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் முன்னிலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிடையேயான கூட்டுறவு அழகன் மற்றும் கூட்டுறுவு அழகி, கூட்டுறவு நட்சத்திரம் பேன்ற பலதரப்பட்ட போட்டிகள் நடாத்தப்பட்டு அவற்றில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன. இவற்றுக்கு இணையாக 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியை அடிப்படையாக கொண்ட கூட்டுறவு துறைசார் வியாபார நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யப்பட்டு கூட்டுறவு தின நிகழ்வுகளின் போது அத்தகைய சங்கங்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர். இறுதியாக 96ஆவது கூட்டுறவு தின நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டததில் உள்ள வெபர் விளையாட்டரங்கத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் நடைபொற்றிருந்தது. இதன் போது கூட்டுறவுதின நிகழ்வுகளுக்கான சகலவிதமான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கண்காணிப்பு மற்றும் அனுசரணையில் நடைபெற்றிருந்தது.

- **வரட்சி நிவாரண பொருட்கள் விநியோகிக்கும் வேலைத்திட்டம்**

அரச நிருவாக மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சு ஊடாக செயற்படுத்தப்படும் 2018 ஆம் ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கிவைக்கும் இவ்வேலைத்திட்டமானது இத்திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சம்மேளனத்தினால் செயற்படுத்தப்பட்டது.

- **மொனராகலை மாவட்டத்தில் நடைபெற்ற V Enterprise Srilanka கண்காட்சிக்கான பங்களிப்பை வழங்கியமை.**

ஏன்ரபிறைசஸ் சிறிலங்க விசன் 2025 கண்காட்சி இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 29,30 மற்றும் 31 ஆகிய தினங்களில் மொனராகலையில் ஆரம்பமாகியது. ஆங்கு சகல அமைச்சுக்கும் காட்சிப் பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்நதுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள இத்திணைக்களத்தினாலும் காட்சிப் பகுதி ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்தது அக் காட்சிப்பகுதிக்கு பாடசாலை மாணவர்கள் உட்பட பெருமாளவானவர்கள் கூட்டுறவுதுறை தொடர்பாக அறிந்து கொள்ளும் நோக்குடன் வருகை தந்திருந்தார்கள்

## 2.11. ஊடக செயற்பாடுகள்

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக பிரிவின் மூலம் ஆற்றப்படுகின்ற பிரதான செயற்பாடாக கூட்டுறவுதுறை தொடர்பான தகவல்களையும் நிகழ்வுகளையும் கூட்டுறவுச் சமுகத்திற்கும் நாட்டுமக்களிற்கும் கிடைக்க செய்வதாகும்.

**சமூபதீபணி சஞ்சிகை பத்திரிகை பிண்ணிணைப்பு.**

மேற்படி நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு 2006ம் ஆண்டு முதல் சமூதீபணி சஞ்சகை பத்திரிகை பிண்ணிணைப்பாக வெளியிடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிகிழமைகளில் சமூதீபணி சஞ்சிகையானது சிங்கள மொழி மூலம் 8 பக்கங்களுடன் தினமின பத்திரிகையின் பின்னிணைப்பாகவும் இதற்கு இணையாக தமிழில் மொழி மூல சஞ்சிகையானது ஒரு பக்கத்துடன் தினகரன் பத்திரிகையின் பின்னிணைப்பாகவும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இதற்காக எமது திணைக்களமானது அசோசியேற்றட் நியுஸ் பேப்பர் நிறுவனத்துடன் மிகநெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றது. மேற்படி பத்திரிகையில் நாடளாவியரீதியில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்பாக செயற்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான விரிவான கட்டுரைகள் வெளியிடப்படுவதுடன் இலங்கையின் கூட்டுறவுத்துறையின் ஆரம்பம் தொடக்கம் அதன் வியாபிப்பு மற்றும் அவற்றின் பல தரப்பட்ட சமூக பணிகள் தொடர்பான கட்டுரைகள் சர்வதேச கூட்டுறவுதுறை தொடர்பான கட்டுரைகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் அடங்கிய ஓர் முழுமையான சஞ்சிகையாக வெளியிடப்பட்டு வருகின்றது. சமூதீபணி சஞ்சிகையானது இவ்வருடத்தில் சிங்கள மொழி மூல பத்திரிகை 12ஐயும் இதற்கு இணையாக தமிழில் மொழி மூல பத்திரிகை 12ஐயும் வெளியிட்டிருந்தது

### 02.12 தகவல் தொழில் நுட்ப பிரிவு

இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தி வரும் அரச முயற்சியாண்மை தனியார் முயற்சியாண்மை என்பவற்றுடன் பேட்டியிட கூடிய முயற்சியாண்மையாக கூட்டுறவு முயற்சியாண்மை கடந்த நூறு வருடங்களுக்கு கூடுதலாக தொழிற்பட்டு வருகின்றது எனினும் தற்போதைய கூட்டுறவுதுறை தொடர்பான வர்த்தக மற்றும் வர்த்தக அல்லாத தகவல்கள் திருத்தமாகவும் விரைவாகவும் பொற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் தாடர்பான தீர்மானங்கள் மேற் கொள்ளம் போது கூட்டுறவுத்துறையானது உள்வாங்கப்படுவதில்லை. இக்குறைபாட்டை அடையாளம் கண்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது சுயமுகாமை செய்ய கூடிய தகவல் தொகுதியின் கீழ் செயற்பட ஆரம்பித்த பின்னர் கூட்டுறவுத்துறையின் இத்தகவல் தொகுதியினை பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக முன்னர் குறிப்பிட்ட குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள கூடியதாக இருப்பதுடன் வினைத்திறனுடைய கூட்டுறவுத்துறையை உருவாக்கும் குறிக்கோளுடன் தகவல் தொழில் நுட்பப் பிரிவு ஒன்றை 2017 ஆம் ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

- Infor –coop கருத்திட்டம் சம்பந்தமான கருத்திட்ட செயற்குழு கூட்டம் 04 ஐ நிகழ்த்தி கருத்திட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு தொடர்பாக கலந்துரையாடுதல்
- Infor –coop கருத்திட்டத்துடன் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்களின் தகவல்களை சேகரித்து அவற்றை பகுப்பாய்வு செய்து அறிக்கை தயாரித்தல்
- கூட்டுறவுச் சங்கங்களின் தகவல் வினாப்பத்திர தொகுப்பு ஒன்றினுடாக பெற்றுகொண்டு அத்தகவல்களை Infor –coop கருத்திட்டத்துடன் தொடர்பான தகவல் தொகுதியை தயாரிப்பதற்க்குரிய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் களனி பலகலைக்கழகத்திற்க்கு அனுப்பிவைத்தல்.
- Infor –coop கருத்திட்டத்துடன் சம்பந்தமான மாகாணங்கள் இடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ளல் ( 07 மாகாணங்கள் இடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- Infor –coop கருத்திட்டத்துடன் சம்பந்தமான எண்ணக்கரு பத்திரம் ( Concept Note) தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.
- திணைக்களத்தின் இணையத்தளத்தின் பாதுகாப்பு குறித்து SLCERT நிறுவனத்திடமிருந்து அறிக்கை பெற்றக் கொள்ளுதல்
- திணைக்களத்தின் Face book கணக்கை இற்றைப்படுத்தல்.
- ஏனைய பிரிவுகளுக்கும் தகவல் தொழில் நுட்பத்தின ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்.
- 96வது சர்வதேச கூட்டுறவு தினத்தின் அழைப்பிதழ் வாகன அனுமதிப்பத்திரம் ஞபகார்த்த மலர்களின் அச்சிட்டு வெளியிடும் போது தேவையான மாதிரிகளை வெளியிடுதல்

# 3ம் அத்தியாயம்

**தேசிய மட்டத்திலான கூட்டுறவு அமைப்புகள்.**

இந்த வருடத்தில் தேசிய ரீதியிலான கூட்டுறவு சம்மேளனங்கள் 13 செயற்பாட்டுடையதாக காணப்பட்டன. கீழ்க்காட்டப்படும் உயர் மட்ட கூட்டுறவு சம்மேளனங்களில் முகாமைத்துவ மற்றும் வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக வழிகாட்டல் மற்றும் அதற்காக ஒத்துழைப்பை வழங்குதல் அவற்றின் செயற்பாடு தொடர்பாக நேரடி கண்காணிப்பை மேற்கொள்ளப்பட்டது.

03. 1 **இந்த வருடத்தில் செயற்பாடுடைய கூட்டுறவு சம்மேளனங்கள்**

| தொடர் இல | கூட்டுறவு சம்மேளனத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்த திகதி |
|---|---|---|---|
| 01 | வ/து இலங்கை தெங்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்க சம்மேளனம். | சி 1086 | 1942.04.01 |
| 02 | வ/து இலங்கை தேசிய மீனவ கூட்டுறவு சம்மேளனம். | சி 1227 | 1952.02.02 |
| 03 | வ/து இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை | சி 2490 | 1972.07.26 |
| 04 | வ/து இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனம். | சி 2504 | 1973.03.01 |
| 05 | வ/து இலங்கை கூட்டுறவு கைத்தொழில் சம்மேளனம் | சி 2527 | 1974.03.19 |
| 06 | வ/து இலங்கை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் | சி 2651 | 1980.11.10 |
| 07 | வ/து இலங்கை கூட்டுறவு நெசவுக்கைத்தொழில் சம்மேளனம். | சி 2559 | 1981.09.02 |
| 08 | வ/து இலங்கை இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | சி 2490 | 1972.07.26 |
| 09 | வ/து இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் | சமு 01 | 1989.09.15 |
| 10 | வ/து இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சம்மேளனம் | சமு 17 | 1997.12.15 |
| 11 | வ/து இலங்கை தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சம்மேளனம் | சமு 29 | 2003.10.07 |
| 12 | வ/து இலங்கை சிக்கனக் கடனுதவி சங்கங்களின் வள முகாமைத்துவ கூட்டுறவு மகா சம்மேளனம் | சமு 30 | 2005.11.21 |
| 13 | வ/து இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சம்மேளனம் | சமு 29 | 2003.10.07 |

### 03.2 இந்த வருடத்தில் செயற்பாடுடைய கூட்டுறவு சங்கங்கள்

திணைக்களத்தின் மேற்பார்வை/ கண்காணிப்பின் மற்றும் வழிநடத்தலின் கீழ் நாடளாவிய ரீதியான 53 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் 2018 ஆம் ஆண்டினுள் செயற்பட்டது. இக் கூட்டுறவு சங்கங்களை 02 முக்கிய தொகுதியாக வகைப்படுத்த முடியும்

- நாடளாவிய நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்
- நாடளாவிய உற்பத்தி மற்றும் ஏனைய சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்.

### 03.2.1. நாடளாவிய நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்

பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களை உறுப்பினராக கொண்டு சிக்கன கடனுதவியை செயற்பாட்டை மேற்கொள்ளுகின்ற சங்கங்கள் ஆகும்

இந்த கூட்டுறவு சங்கங்களின் பிரதான செயற்பாடுகள்

1. சங்கத்தில் அங்கத்துவத்தை வகிக்கும் நிறுவன ஊழியர்களின சேமிப்புகளைத் திரட்டுதல்.
2. உறுப்பினர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்
3. அங்கத்துவத்தின் நலன்புரிக்கு வழியமைத்தல். (மரண நிதியுதவி, புலமைப்பரிசில் நிதியுதவி, மருத்துவ நிதியுதவி, நுகர்வு மற்றும் ஏனைய அன்னியோன்ய நிதியுதவி முறை போன்றவற்றை அபிவிருத்தி செய்து பெணுதல்)
4. ஏனைய சேவைகளை வழங்குதல்( மடங்கள், விடுமுறைத் தங்குமிடங்கள், ஈட்டுச் சேவை, அச்சக வசதிகள், காப்புறுதி முகவர் சேவை)

### 03.2.2 நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.

நுகர்வோரின் தேவைக்கேற்பவும் அவசியமான உற்பத்தி மற்றும் சேவைகளைள் வழங்கும் ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களாக அடையாளம் காணபட்டுள்ளது

இந்த கூட்டுறவு சங்கங்களின் பிரதான செயற்பாடுகள்

- உறுப்பினர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்தல
- உற்பத்திகள் மற்றும் சேவை வழங்கல் தெடர்பான அங்கத்துவர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல்
- உறுப்பினர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை அறிமுகம் செய்தல் சந்தை வாய்ப்பை விரிவுபடுத்தல்
- உறுப்பினர்களிற்கான தொழல்நுட்ப மேம்பாடு மற்றும் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

### 3.2.3. இவ்வாண்டின் செயற்பாடுடைய கூட்டுறவுச் சங்கங்கள்

| | கூட்டுறவு சங்கத்தின் பெயர் |
|---|---|
| 01 | வ/ப துறைமுக அதிகார சபை ஊழியர்களின் கூட்டுறவு வங்கி சங்கம் |
| 02 | வ/ப அகில இலங்கை அப்பியாக புத்தக உற்பத்தியாளாகள் கூட்டுறவுச் சங்கம் |
| 03 | வ/ப இலங்கை இழுவலை உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கம |
| 04 | வ/ப நிலஅளவை திணைக்களத்தின நில அளவை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் |
| 05 | வ/ப இலங்கையின் மகளீர்களுக்கான அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கம். |
| 06 | வ/ப சணச அபிவிருத்தி வங்கி ஊழியர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 07 | வ/ப சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் பரிசோதனை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 08 | வ/ப நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஒருமித்த ஊழியர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம். |
| 09 | வ/ப நீர் வழங்கள் சபையின் ஒருமித்த ஊழியர்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 10 | வ/ப அரச சேவை பட்டதாரிகளின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 11 | வ/ப அகில இலங்கை சிறிய மற்றும் மத்திய அளவிலான விதைகள் களஞ்சிய முயற்சியாண்மையாளர்களின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். |
| 12 | வ/ப இலங்கை துறைமுக கப்பல் சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கம் |
| 13 | வ/ப வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் |
| 14 | வ/ப ரஜரட்ட பல்கலைக்கழக கூட்டுறவு சங்கம் |
| 15 | வ/ப அகில இலங்கை விவசாய கூட்டுறவுச் சங்கம் |
| 16 | வ/ப பிரஜாசக்தி இளைஞர்கள் வலுவுட்டல் கூட்டுறவு சங்கம் |
| 17 | வ/ப விவசாய மற்றும் சூழலியலாளர்களின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் |
| 18 | வ/ப இலங்கை முயற்சியாண்மையளர்களின் அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கம் |
| 19 | வ/ப இலங்கை தொழில் நுட்ப அபிவிருத்தி தேசிய கூட்டுறவு சங்கம் |
| 20 | வ/ப தேசிய வர்த்தக கூட்டுறவு சங்கம் |
| 21 | வ/ப இலங்கை அபிவிருத்தி மற்றும் முதலீட்டு கூட்டுறவுச் சங்கம் |
| 22 | வ/ப அகில இலங்கை விசித்திரப்பயிர்கள் தொங்கு பயிர்ச் செய்கையாளர்களின் கூட்டுறவுச் சங்கம |
| 23 | வ/ப கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சேவை வழங்குனர்களின் கூட்டுறவு சங்கம் |
| 24 | வ/ப இலங்கை (ஹரித) பசுமை கூட்டுறவுச் சங்கம் |
| 25 | வ/ப தேசிய சூழலைப் பாதுகாப்பவர்களின் கூட்டுறவு சங்கம் |
| 26 | வ/ப வியாபார முகாமைத்துவ முயற்சியாண்மையாளர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை சேவை வழங்குனர்களின் கூட்டுறவு சங்கம் |

| | |
|---|---|
| 27 | வ/ப தேசிய விஞ்ஞான மற்றும் ஆராட்சி கூட்டுறவுச் சங்கம். |
| 28 | வ/ப இலங்கை ஊடகவியலாளர்களின் கூட்டுறவுச் சங்கம். |
| 29 | வ/ப இலங்கை கைத்தறி நெசவாளர்களின் சந்தைப்படுத்தல் மற்றும் முயற்சியாண்மையாளர்களின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். |
| 30 | வ/ப சுகாதாரத் திணைக்களத்தின் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். |
| 31 | வ/ப சிறைச்சாலை திணைக்களத்தின் சேவை வழங்கல் மற்றும் கட்டிட நிர்மாண தொளிலாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம |
| 32 | வ/ப புகையிரத அதிபா் மற்றும் எழுதுவினைஞர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |
| 33 | வ/ப கல்வித் துறைசார் பணியாளா்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |
| 34 | வ/ப தேசிய பயிற்சியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் |
| 35 | வ/ப அகில இலங்கை வெளிநாட்டு மொழிக்கல்வி ஊக்குவிப்பு கூட்டுறவுச் சங்கம். |
| 36 | வ/ப மக்கள் வங்கி பணியாளா்களின் கூட்டுறவு சங்கம் |
| 37 | வ/ப சிறைச்சாலைத் திணைக்களத்தின் சேமலாப நிதிய கூட்டுறவு சங்கம் |
| 38 | வ/ப இளைஞர் வலுவூட்டல் கூட்டுறவுச் சங்கம |
| 39 | வ/ப ஹுதபிம் கூட்டுறவுச் சங்கம |
| 40 | வ/ப அல் அக்ஸா பாடசாலை கூட்டுறவுச் சங்கம் |
| 41 | வ/ப கன்னங்கர சக்தி பாடசாலை கூட்டுறவுச் சங்கம் |
| 42 | வ/ப பிரவுண்ஸ் குடும்ப தொழில்நுட்ப மற்றும் பொதுச்சேவை பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் |
| 43 | வ/ப சுகாதார சேவை பணியாளர்களின் அபிவிருத்திச் சேவை கூட்டுறவுச் சங்கம |
| 44 | வ/ப அரச சேவையில் உள்ளவர்களின் சிக்கன மற்றும் கடனுதவி கூட்டுறவு சங்கம் |
| 45 | வ/ப கூட்டுறவு திணைக்களத்தின் அதிகாரிகள் தரத்திலான உத்தியோகத்தர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |
| 46 | வ/ப சதொச பணியாளா்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் |
| 47 | வ/ப அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு திணைக்களத்தின் பணியாளா்களின் கூ.ட்டுறவு வங்கி சங்கம். |
| 48 | வ/ப அகில இலங்கை அச்சக உரிமையாளா் கூட்டுறவுச் சங்கம். |
| 49 | வ/ப பதிவாளா் நாயகத்தின் திணைக்கள பணியாளா்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |
| 50 | வ/ப இ.போ.ச. ஊழியர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் |
| 51 | வ/ப சுகாதார பணியாளர்களின் நிதிச் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம். |
| 52 | வ/ப உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம். |
| 53 | வ/ப சுகாதாரத் திணைக்களத்தின் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் |